வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வந்து, அந்தந்த வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களையோ அல்லது தேவையான நிதியினையோ பெற்றுக்கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்காது என்ற காரணத்தினால்தான், அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குள்ளேயே அந்தக் கட்டடம் இயங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

வன அலுவலகக் கட்டடம்

*__4023__—**திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலுள்ள வனச் சரக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழியைத் தலைமையிடமாகக் கொண்டு சீர்காழி வனச் சரக அலுவலகம், தற்சமயம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகம் இயங்க சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வனத் துறைக்குச் சொந்தமான நிலம் எதுவும் சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இல்லை. மேலும், சீர்காழி நகராட்சி எல்லைக்கு அருகில் காப்புக் காடுகளும் இல்லை. சீர்காழி வனச் சரகம் பழமை வாய்ந்த சரகம் என்பதால், அச்சரகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்து தரும்படி, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரிடம், நாகப்பட்டினம் வன உயிரினக் காப்பாளர் அவர்களால் கேட்கப்பட்டுள்ளது. இதற்கான

2012 ஏப்ரல் 17]

நிலம், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டதும், சீர்காழி வனச் சரக அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 64—வது அவதாரத் திருநாளான அன்று, 64 இலட்சம் மரக் கன்றுகளை நட்டு, மரம் வளர்ப்பதை ஊக்கப்படுத்தி, மண் வளத்தைக் காத்து, மழை வளத்தைப் பெருகச் செய்து, இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திய பார் புகழும் பாராளப் பிறந்த எங்கள் பாரதத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வனச் சரக அலுவலகம் சீர்காழி தொகுதியில் இயங்கி வருகிறது. வனச் சரக அலுவலகத்திற்குச் சொந்த இடமோ, கட்டடமோ இல்லை. Reserve Forest Area அதிகமாக உள்ள இடம் சீர்காழி தாலுகா. சீர்காழி, மயிலாடுதுறை, தரங்கம்பாடி, குத்தாலம் ஆகிய நான்கு தாலுகாக்களுக்கும் ஒரே வனச் சரக அலுவலகம் சீர்காழிதான். தற்போது சீர்காழி, சட்டனாதபுரம், பாலாஜி நகரில் வனச் சரக அலுவலகம் இயங்கி வருகிறது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நிச்சயமாக சீர்காழி தொகுதிக்கு ஒரு வனச் சரக அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—30

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் வனச் சரக அலுவலகக் கட்டடம் கட்ட இடம் வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வன உயிரினக் காப்பாளரால் நினைவூட்டப்பட்டது. நாகப்பட்டினம்

மற்றும் சீர்காழி நகராட்சிப் பகுதிகளில் வருவாய்த் துறையினரால் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. வனச் சரக அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து ஆணை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் ஒரு வனச் சரக அலுவலகம் கட்டுவதற்கு ரூ.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. நில ஒதுக்கீடு ஆணை கிடைக்கப்பெற்றவுடன் வனச் சரக அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 3–9–2007 ஆம் தேதியன்று தனியார் நிலங்களில் இருக்கக்கூடிய மா, பலா, தென்னை, பனை, சவுக்கு போன்ற 36 வகையான மரங்களை வெட்டிக் கொண்டு செல்வதற்கு இருந்த தடையை நீக்கி அரசுக்கு அதனால் வருகின்ற வருமானத்தில் இழப்பு ஏற்படுத்தியிருகின்றார்கள். எனவே, Timber Transport Rules–ஐ மீண்டும் அமல்படுத்தி, தனியார் நிலங்களில் வெட்டப்படுகின்ற . . (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த தினத்தின்போது 64. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினா வன அலுவலகக் கட்டடம் கட்டுவது சம்பந்தமானது. நீங்கள் இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

104—

கான்கிரீட் கட்டடம்

***8464—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—